அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.30/94

எனது இல. 1/543 ஈ 02டி/02/94(1)தற்காலிக
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
1994,ஆகஸ்ட் 11ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

செயலாளர்கள், மேலதிகச் செயலாளர்களினதும் தீவு அடங்கல் சேவைகளினதும் சம்பள முரண்பாடுகளை அகற்றல்.

அரசாங்கம் 1994,ஆகஸ்ட் மாதம் முதல் செயற்படுமாறு செயலாளர்கள், மேலதிகச் செயலாளர்களினதும் தீவு அடங்கல் சேவைகளிலுமுள்ள சம்பளங்களை மீளமைக்கத் தீர்மானித்துள்ளது.

2. (அ) உரிய சம்பள அளவுத்திட்டங்கள் வருமாறு:-

| | |
|---|---|
| செயலாளர் | ரூ.143,400-8x7,800-205,800 |
| மேலதிகச்செயலாளர் | ரூ.135,600-8x7,800-198,000 |
| வகுப்பு 1 | ரூ.105,000-10x4,800-153,000 |
| வகுப்பு 11 தரம் 1 | ரூ.80,400-7x3,000-101,400 |
| வகுப்பு 111 தரம் 11 | ரூ.53,880-15x1,560-77,280 |

(ஆ) தீவு அடங்கல் சேவைகள் வருமாறு:-

(1) இலங்கை நிருவாக சேவை
(2) இலங்கை கணக்காளர் சேவை
(3) இலங்கை எந்திரிகள் சேவை
(4) இலங்கை விஞ்ஞான சேவை
(5) இலங்கை கல்வி நிருவாக சேவை
(6) இலங்கை திட்டமிடல் சேவை
(7) இலங்கை கமத்தொழில் சேவை
(8) இலங்கை மிருக உற்பத்தி, சுகாதார சேவை

3. இச் சேவைகளிலுள்ள உத்தியோகத்தரினது சம்பள ஏற்றத் திகதிகள் மாற்றமின்றி அவ்வாறே அமையும்.

4. இச் சேவைகளிலுள்ள அலுவலர்களுக்கு இப்போதுள்ள வினைத்திறன்காண் தடைகள் புதுச்சம்பள அளவுத் திட்டங்களில் முன்னைய சம்பள அளவுத்திட்டத்துக்கு நேரொத்த சம்பளப்படிகளில் செயற்படும்.

5. இப்போதைய சம்பளங்களிலிருந்து புதிய சம்பளங்களுக்கு மாற்றுதல் படிக்குப் படி அடிப்படையில் நிகழும்.

ஒப்பம்: வை.பி.புஸ்ஸெதெனிய.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.